ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2204/2 - 2020 නොවැම්බර් මස 30 වැනි සඳුදා - 2020.11.30

*2204/2 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 30 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்***

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணாயக்கார ஆகிய நான், குறித்த சபைக்கு படல்கும்புர நீர் வழங்கல் செயற்திட்டத்தின் கீழ், அலுபொத நிலக்கீழ் நீர்த் தடாகத்தை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதி ஒன்றின் வழியுரிமையை சுவீகரித்துக்கொள்ள வேண்டியுள்ளமையினால், இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் வழியுரிமையைச் சுவீகரித்துக்கொள்ளும் கட்டளையினூடாக அனுமதியளிக்கின்றேன்.*

**வாசுதேவ நாணாயக்கார,**
*நீர் வழங்கல் அமைச்சர்.*

*நீர் வழங்கல் அமைச்சு,*
*இலக்கம் 35, 'லக்திய மெதுர',*
*புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2020, நவெம்பர் 10.*
*தொடர்பு இல. : 5/4/MJ/1.*

**அட்டவணை**

*மொனராகலை மாவட்டத்தில், படல்குபுர பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் 132, அலுபொத கிராம அலுவலர் பிரிவில் அலுபொத கிராமத்தில் அமைந்துள்ள இத்துடன் அனுப்பி வைக்கப்படும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் திரு. பீ. பேரின்பநாதன் அவர்களினால் 2019.06.24 ஆந் திகதி வரையப்பட்டுள்ள இலக்கம் 2202 ஆம் திட்டப்படத்தில் துண்டிலக்கம் 1 என*


*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

சுட்டிக்காட்டப்பட்டுள்ள ஒசில்லாகிவுல என்றழைக்கப்படுகின்ற காணியின் முழு விஸ்தீரணத்தில் இருந்து அண்ணளவாக 10 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி.

வடக்கு : ஏ. எஸ். ஏ. ஹனீ உரிமம் கோருகின்ற காணி ;
கிழக்கு : வீதிப் பாதுகாப்பு ;
தெற்கு : எம். எச். எம். சம்ஹுன் உரிமம் கோருகின்ற காணி ;
மேற்கு : ஏ. எஸ். ஏ. ஹனீ உரிமம் கோருகின்ற காணி.

காணிக்கு உரிமை கோருபவர்களின் பெயரும் முகவரியும் : (1) ஏ. எஸ். ஏ. ஹனீ,
ஒயில்லாகிவுல, அலுபொத,
படல்கும்புர.

12-158

---

திருத்தம்

1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணாயக்கார ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2112/41 ஆம் இலக்க, 2019.02.28 ஆந் திகதியின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் 1A பக்கம் மற்றும் 2A பக்கத்தில் இலக்கம் 03-767 இன் கீழ் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் காணிக்கு எல்லைகளாக,

வரைபட இலக்கம் எப்சீபீ பொ 13 இல் பத்திரிகை இலக்கம் 52 இல், மேலதிக இலக்கம் 40 இற்குரிய வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 1049 இன் பகுதி-

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 1049 இற்குரிய இந்தக் காணியின் எஞ்சிய பகுதி ;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 1049 இற்குரிய இந்தக் காணியின் எஞ்சிய பகுதி ;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 1049 இற்குரிய இந்தக் காணியின் எஞ்சிய பகுதி ;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 1795 இற்குரிய காணித்துண்டு.

இனால் குறிப்பிடப்பட்டிருப்பினும்,

வரைபட இலக்கம் எப்சீபீ பொ 13 இல் பத்திரிகை இலக்கம் 52 இல், மேலதிக இலக்கம் 40 இற்குரிய வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 925 இன் பகுதி-

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 925 இற்குரிய இந்தக் காணியின் எஞ்சிய பகுதி ;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 924 இற்குரிய இந்தக் காணித்துண்டு ;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 926 இற்குரிய இந்தக் காணித்துண்டு ;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 925 இற்குரிய இந்தக் காணியின் எஞ்சிய பகுதி.

என்பதாக திருத்தப்பட வேண்டும் என இத்தால் அறியத்தருகின்றேன்.

**வாசுதேவ நாணாயக்கார,**
நீர் வழங்கல் அமைச்சர்.

நீர் வழங்கல் அமைச்சு,
இலக்கம் 35, 'லக்திய மெதுர',
புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2020, ஒற்றோபர் 21.
தொடர்பு இல. : 5/2/1/1433.

12-159

## திருத்தம்

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணாயக்கார ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2144/62 ஆம் இலக்க, 2019.10.11 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் 1A பக்கத்தில் இலக்கம் 10-956 இன் கீழ் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் "பாரிய மாத்தளை நீர் வழங்கல் திட்டத்தின் ரத்தொட்டை நீர் பம்பிக்கும் நிலையம் மற்றும் உட்பிரவேசிக்கும் பாதையை நிர்மாணிப்பதற்காக மாற்றுக் காணித்துண்டுகளை எடுத்துக்கொள்ளல்" என குறிப்பிடப்பட்டிருப்பினும், அது "பாரிய மாத்தளை நீர் வழங்கல் திட்டத்தின், ரத்தொட்டை நீர் பம்பிக்கும் நிலையம் மற்றும் உட்பிரவேசிக்கும் பாதையை நிர்மாணிப்பதற்காக காணித்துண்டுகளை எடுத்துக்கொள்ளல்" என திருதப்பட்ட வேண்டும் என இத்தால் அறியத்தருகின்றேன்.*

**வாசுதேவ நாணாயக்கார,**
*நீர் வழங்கல் அமைச்சர்.*

*நீர் வழங்கல் அமைச்சு,*
*இலக்கம் 35, 'லக்திய மெதுர',*
*புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2020, செத்தெம்பர் 10.*
*தொடர்பு இல. : 5/2/1/1503.*

*12-160*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.